# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

************

முறையீட்டு மனு எண்: 26/2017/பே.2

ஆணை எண்: 270 /2017நாள்: 23/11/2017

திரு. எஸ். டி. பெருமாள்,
ஏ–3, ஸ்ரீநிவாஸ் அபார்ட்மெண்ட்,
8/84, பசூல்லா ரோடு, தியாகராய ரோடு,
சென்னை – 600 017. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மாங்காடு பேரூராட்சி,
மாங்காடு. – எதிர் மனுதாரர்

திரு. எஸ்.டி. பெருமாள், தலைவர், கலைமகள் குடியிருப்போர் நலச் சங்கம், மாங்காடு ஏ–3, ஸ்ரீநிவாஸ் அபார்ட்மெண்ட், 8/84, பசூல்லா சாலை, தியாகராய நகர், சென்னை–17 என்பவர் தாக்கல் செய்த முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.26/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:-

## ஆணை

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் மாங்காடு பேரூராட்சியில் சர்வே எண்.375/3 மற்றும் 375/1 மற்றும் 2 ஆகியவைகளில் உள்ள கலைமகள் நகர் பொது சாலையினை,எண். 133, கிழக்கு அண்ணா வீதி, மாங்காடு, என்ற விலாசத்தில் குடியிருக்கும் திரு.ஏ.சிநாகலிங்கம், மேலும் மாங்காடுவில் வசிக்கும் திரு. தேவசகாயம் மற்றும் திரு. லோகநாதன் ஆகியோர் ஆக்கிரமித்துள்ளதாகவும், சாலையின் நடுவே அனுமதியில்லாத கட்டிடங்கள் மற்றும்

குடிசை அமைத்துள்ளதாகவும் முறையிட்டுள்ளார். மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலர் உள்நோக்கத்தோடு முதல் குறுக்குத் தெருவில், எந்தவித அடிப்படை வசதியும் செய்யாமல் புறக்கணித்து வருவதாகவும் முறையிட்டுள்ளார்.

2. மேலும், முறையீட்டு மனுதாரர் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக 15.04.16 அன்று செயல் அலுவலர் திருமதி. V. பிரேமா என்பவரிடம் மேற்படி புகார்கள் குறித்து நேரில் மனு அளித்ததாகவும், மேற்படி ஆக்கிரமிப்பு இடம் குறித்து திரு. நாகலிங்கம் என்பவரால் ஸ்ரீபெரும்புதூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதெனவும், அது குறித்து எந்தவித மேல்முறையீடும் தொடரப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி நீதிமன்ற வழக்கில் மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலர் 3–ஆம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டிருந்ததாகவும், மேற்படி வழக்கு முடிவுற்ற பின்னரும் செயல் அலுவலர் ஆக்கிரமிப்பினை அகற்ற சட்டபூர்வமான எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு ஆதரவாக செயல்படுவதாகவும் முறையிட்டுள்ளார்.

3. மேற்படி முறையீட்டு மனு குறித்து விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்க கோரி இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 26/2017/பே2/நாள் 14.02.2017 மூலம் மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண் ந.க. 142/2016/அ.1/நாள் 03.03.2017ல் தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.மேற்படி விளக்க அறிக்கையில், செயல் அலுவலர் கீழ்கண்டவாறு விளக்கமளித்துள்ளார்:-

(i) முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள புகாரில் மாங்காடு கிராமம், கலைமகள் நகர் முதலாவது குறுக்குத் தெருவானது பொது வழி என்றும், அது சர்வே எண். 375/3, 376/1 மற்றும் 376/2 ல் அமைந்துள்ளது என்றும், பொது வழியினை திரு. குப்பன் மகன் திரு. நாகலிங்கம் எண். 33, மேற்கு அண்ணா தெரு, மாங்காடு மற்றும் திரு. தேவசகாயம், திரு. லோகநாதன் ஆகியோர் ஆக்கிரமிப்பு செய்து சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் மற்றும் குடிசைகள் அமைத்து இருப்பதாக கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனவும் கலைமகள் நகரில் அமைந்துள்ள முதல் தெருவானது சர்வே எண். 355/3, 376/1 மற்றும் 376/2 ல் மட்டுமே பொது வழியாக மாங்காடு பேரூராட்சி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளார். மேற்சொன்ன பொது வழியில் 15 அடி அளவுக்கு

மாங்காடு பேரூராட்சியால் தார்ச்சாலை அமைக்கப்பட்டு இன்று வரை பராமரிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

(ii) முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில் கூறியுள்ளது போல் பேரூராட்சி செயல் அலுவலர் வேண்டுமென்றே கலைமகள் நகர் முதல் தெருவினை பராமரிக்காமல் புறக்கணிப்பதாகவும் அதன் காரணமாக முள் புதர்கள் வளர்ந்து இருப்பதாகவும் கூறியிருப்பது உண்மைக்கு புறம்பானது எனவும், உண்மையில் மேற்படி இடத்தில் 15 அடி அளவிற்கு தார்ச்சாலை அப்போதைய செயல் அலுவலர் திரு. குணசேகரன் என்பவரால் 30.04.2010ல் பணி ஆணை வழங்கப்பட்டு 17.03.2011ல் பணி முடிக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தெரு விளக்கு தினசரி எரியவைக்கப்படுவதாகவும், பொது சுகாதார பணியாளர்கள் மற்றும் ஹேண்ட் இன் ஹேண்ட் தொண்டு நிறுவனம் மூலம் வீடு வீடாக மக்கும் மற்றும் மக்காத குப்பை தரம் பிரிக்கப்பட்டு வாங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

(iii) முறையீட்டு மனுதாரர் பேரூராட்சி அலுவலகத்தில் 15.04.2016 அன்று மாங்காடு பேரூராட்சி, கலைமகள் நகரில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும் எனக்கோரி கொடுத்த மனுவுடன் சமர்ப்பித்த ஆதார ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதாகவும் கலைமகள் நகருக்கான சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும வரைபடம் மற்றும் அனுமதி கடிதம், பேரூராட்சிக்கு அளித்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் வருவாய்துறையில் வழங்கப்பட்ட FMB வரைபடம், 19.03.2009ல் வழங்கிய சட்டக் கருத்துரை, காஞ்சிபுரம் துணை இயக்குநர் (பேரூராட்சிகள்) வழங்கிய பிரமாண வாக்குமூலம் ஆகிய ஆவணங்களைப் பரிசீலித்ததில் கீழ்க்கண்ட உண்மைகள் தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளார்:-

"...காஞ்சிபுரம் மாவட்டம் நில ஒதுக்கீடு அலுவலர் அவர்களின் உத்திரவு எண். 142.70 ஆசுஐஏது, நாள் 17.01.1985ல் திரு. மாசிலாமணி, த/பெ. நாகமணி என்பவருக்கு சர்வே எண். 375ல் 78 சென்ட்டும், 376 ல் 22 சென்ட்டும், திரு. வைத்திலிங்கம், த/பெ குப்பன், என்பவருக்கு சர்வே எண். 376 ல் 1.00 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண். 713/1987/ஆ2/நாள் 18.01.1988 ல் சர்வே எண். 376/1, 376/2 மற்றும் 375/3 ல் ஆக மொத்தம் 1.84 ஏக்கர் மட்டும் குடியிருப்பு மனை அனுமதி கோரி பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மேலும் சர்வே எண். 375/3 ல் 78 சென்டும், சர்வே எண். 376/1 ல் 22

சென்டும் ஆக மொத்தம் 1 ஏக்கர் நிலம் திரு. தீனதயாளன், த/பெ குப்புசாமி நாயுடு என்பவருக்கு பத்திர எண். 1840/1988 மற்றும் சர்வே எண். 376 ல் 1 ஏக்கர் விவசாய நிலத்தில் 84 சென்ட் மட்டும் தீனதயாளன், த/பெ. குப்புசாமி நாயுடு என்பவருக்கு பத்திர எண். 1840/1988 மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து தீனதயாளன், த/பெ குப்புசாமி நாயுடு என்பவரால் திரு. ஊ.கு.மணி என்பவருக்கு பொது அதிகார பத்திர எண். 448/1988ல் ஒட்டுமொத்தமாக 1 ஏக்கர் 84 சென்ட் மட்டும் மனை பிரிவு செய்வது தொடர்பாக பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் சர்வே எண். 375/3 மற்றும் 376/1, 376/2 க்கு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அனுமதியின்படி சாலைப்பகுதி 2095.034 சதுர மீட்டர் பேரூராட்சிக்கு தான பத்திரம் மூலம் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து சர்வே எண். 375/3 மற்றும் 376/1, 376/2 க்கு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களால் வரைபட அனுமதி எண். 146/89 நாள் 13.07.1989 ல் மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்ட 1 ஏக்கர் 84 சென்டிற்கு பதிலாக மொத்த விஸ்தீர்ணம் 2 ஏக்கர் (8093.60 சதுர மீட்டருக்கு) 28 குடியிருப்புகளும் ஒரு கடைக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஆக ஒப்படைவு செய்யப்பட்ட நிலத்திற்கும் அனுமதி அளிக்கப்பட்ட நிலத்திற்கும் சுமார் 16 சென்ட் அளவிற்கு நில வித்தியாசம் உள்ளது. இந்த நில அளவு வித்தியாசம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வரைபடத்தில் தெரியவருகிறது. ஆகையால் மனுதாரர் கூறியுள்ளபடியும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளபடியும் சாலையினை கண்டறிவதில் தெளிவில்லாத நிலை ஏற்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் நில அளவுகளில் உள்ள வித்தியாசம் அன்றைய நிலையில் அங்கீகாரம் செய்யப்பட்ட வரைபடத்தில் தெளிவாகியிருந்தால் அப்போதைய செயல் அலுவலரால் சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். தற்போது சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அளவுகளை தெளிவு படுத்தினால் அதன்படி செயலாற்ற மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தயாராக உள்ளார்.", என தெரிவித்துள்ளார்.

(iv) மேலும், திரு. நாகலிங்கம் என்பவர் திருபெரும்புதூர் உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு எண்.1425/2008 தற்போது வரை நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அந்த வழக்கில், சர்வே எண்.376ல், திரு. நாகலிங்கம் என்பவரது தந்தை வழி அனுபவ பாத்யதையில் இருந்துவரும் 16 சென்ட் நிலத்தில் 4 சென்ட் நிலத்தினை வேம்புலி

அம்மன் கோயில் கட்டுவதற்காக வழங்கியதாகவும், மீதமுள்ள 12 செண்ட் நிலத்தினை அவர் அனுபவித்து வருவதாகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் இதனை வாதி மறைத்துள்ளாரெனவும் குறிப்பிட்டுள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் 06.06.2017 அன்று ஆஜராகி தனது தரப்பிலான விளக்கங்களை வாக்குமூலமாக பதிவு செய்தார். மேற்படி வாக்குமூலத்தில் திரு. நாகலிங்கம் என்பவர் ஒரு பொய்யான ஆவணத்தை உருவாக்கி அதன் அடிப்படையில் ஒரு வழக்கினை திருப்பெரும்புதூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ளாரெனவும், லே அவுட்டில் தென் பகுதியில் உள்ள 30 அடி ரோட்டை அவர் ஆக்கிரமித்து வைத்துள்ளாரெனவும், தெரிவித்தார். மேலும் முன்னாள் செயல் அலுவலர் திரு. ரவிக்குமார் என்பவர் அடிப்படை வசதிகள் செய்துதர லஞ்சம் கோரியதாவும், நில அளவீடுகளை திருத்தியதாகவும், விவசாய நிலம் 12.2 மீட்டர் என்பதை 16.6 மீட்டர் என FMB யில் திருத்தி குற்றம் செய்துள்ளார் எனவும், செயல் அலுவலர் திருமதி. பிரேமா என்பவரும் திருபெரும்புதூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்கினைக் காரணங்காட்டி ஆக்கிரமிப்பை அகற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் எந்த பதிலும் எழுத்துபூர்வமாக கொடுக்கவில்லை எனவும் தெரிவித்தார். நீதிமன்ற ஆணைகளின்படி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருமதி. யசோதா, நில அளவையர்கள், வட்டாட்சியர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மற்றும் முன்னாள் தலைவர் திரு. ஸ்ரீனிவாசன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு 30 அடி ஆக்கிரமிப்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது எனவும் அதன் பின்னர் திரு. ரவிக்குமார் செயல் அலுவலர் மூலமாக மீண்டும் ஆக்கிரமிப்புகள் நிகழ்ந்துள்ளதெனவும் குறிப்பிட்டார்.

5. முறையீட்டு மனுதாரர் மீண்டும் 15.06.2017 அன்று ஆஜராகி சில ஆதார ஆவண நகல்களையும் சமர்ப்பித்தார். மேலும், முறையீட்டு மனுதாரர் தரப்பு சாட்சியான திரு. ராஜா என்பவர் 15,06,2017 அன்று அளித்த வாக்குமூலத்தில் முன்னாள் செயல் அலுவலர் திரு. ரவிக்குமார் என்பவர் 7.6.2017 அன்று காலை 11.30 மணி அளவில் தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அநாகரீகமாக பேசியதாகவும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

6. இதனிடையே இம்முறைமன்ற நடுவ 19.6.2017 நாளிட்ட அழைப்பாணை மூலம் 10.7.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு திரு. ரவிக்குமார், முன்னாள் மாங்காடு பேரூராட்சி செயல்

அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி 10.7.2017 அன்று ஆஜரான திரு. ரவிக்குமார் முன்னாள் மாங்காடு செயல் அலுவலர், தனது வாக்கு மூலத்தில், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மனுவிலுள்ள இடத்தில் உள்ள ஆக்கிரமிப்பை, காவல்துறை மற்றும் வருவாய்துறை முன்னிலையில் அகற்றப்பட்டுவிட்டதென பேரூராட்சி இயக்குநருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் எனவும் 23.12.1987 திரு. தீனன் என்பவர் சர்வே எண்.375/3ல் 78 செண்ட், சர்வே எண்.376/1ல் 22 செண்ட், சர்வே 376/2 ல் 84 செண்ட் என மொத்தம் 1 ஏக்கர் 84 செண்டிற்கு மனைப்பிரிவு அனுமதி கோரி விண்ணப்பித்ததை பரிந்துரை செய்து கருத்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் 2 ஏக்கருக்கு 15.7.1989ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டதெனவும், சென்னை பெருநகர வளர்ச்சிக்கு குழும வரைபட அங்கீகாரத்தின்படி வழக்கிலுள்ள நிலம் சாலையாக உள்ளதெனவும், 30 அடி சாலையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மீண்டும் 18.7.2017 அன்று கூடுதல் விவரங்களுடன் ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

7. 18.7.2017 ல் மீண்டும் ஆஜரான திரு. ரவிக்குமார், முன்னாள் மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலர் கீழ்க்கண்டவாறான கூடுதல் விளக்கம் /வாக்குமூலத்தை தாக்கல் செய்தார். ஆக்கிரமிப்புகளை 23.3.2009ல் தான் அகற்றி விட்டதாகவும் அதன் அடிப்படையில் தான் அப்போதைய உதவி இயக்குநர் திரு. சுந்தரம் என்பவர் ஆக்கிரமிப்பு முழுவதும் அகற்றப்பட்டுவிட்டதென பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அறிக்கை அனுப்பினார் எனவும், 09.11.2009ல் தான் பணி மாறுதலில் செவிலிமேடு பேரூராட்சிக்கு சென்று விட்டதாகவும், திரு. நாகலிங்கம் என்பவர் 16 செண்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும் அந்த ஆக்கிரமிப்பாளரை தான் இயக்குவதாக நினைத்து தன்மீது காவல்துறையில் முறையிட்டு மனுதாரர் புகார் செய்துள்ளாரெனும் தெரிவித்தார்.

8. மேலும், தனக்குப் பின் பொறுப்பு வகித்த செயல் அலுவலர் திரு. குணசேகரன் என்பவர் ரூ.4.2 இலட்சத்தில் ஒரு சாலை அமைத்திட மதிப்பீடு செய்து 30.4.2010ல் பணி ஆணை வழங்கப்பட்டு, மனை 22 முதல் 28 வரை மொத்த 7 மனைகள் வரை சாலை போடப்பட்டதெனவும் முதலாவது போடப்பட்ட மதிப்பீடு அறிக்கையின் கீழ் சாலைகள், இருபுறத்திலும் மழை நீர் செல்வதற்கு வடிகால், சிறுபாலங்கள் முதலியன இடம் பெற்றுள்ளன எனவும், 7 மனைகளுக்கு மட்டும் சாலை அமைத்து ரூ.1.73 இலட்சத்தை ஒப்பந்ததாரருக்கு வழங்கிவிட்டு அதன்பின் பணியை தொடரவில்லை எனவும் இது சம்பந்தமாக 11.3.2011ல் செயல் அலுவலரால்

இயக்குநருக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார். மனைபிரிவு விண்ணப்பம் 23.12.1987ல் மனுதாரர் திரு. தீனன் என்பவர் பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அனுப்பி உள்ளாரெனவும், ஆனால் அதன் நிலம் கிரையம் பெற்ற பத்திரப் பதிவு 16.5.1988ல் நடந்துள்ளதெனவும், பதிவு எண். 1840 மற்றும் 1841 என இரண்டு பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், முதல் பத்திரத்தில் 2 சர்வே எண்களில் 1 ஏக்கர் நிலம் என்றும் இன்னொரு பத்திரத்தில் 100 சென்டுகள் என்பதை பின்பு 84 சென்டுகளாகவும் மார்க்கெட் மதிப்பு ரூ.50 ஆயிரம் என்பதை ரூ.42 ஆயிரம் எனவும் திருத்தங்கள் செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டார். இதனை அடிப்படையாக வைத்து திரு. தீனன் பொது அதிகார ஆவணமொன்றை 22.7.1988ல் உருவாக்கியுள்ளாரெனவும் அதில் திரு. வெங்கட்ராமன் என்பவரையும் திரு. மணி என்பவரையும் முகவர்களாக நியமித்துள்ளாரெனவும் அதில் 1 ஏக்கர் 84 சென்ட் என உள்ளதாகவும் தெரிவித்தார். மேலும், அந்த நிலம் காஞ்சிபுரம் மாவட்ட நில சீர்திருத்த அதிகாரம் பெற்ற அலுவலர்களால் 17.1.75ல் திரு. வைத்தியலிங்கம் என்பவருக்கு சர்வே எண். 376ல் 1 ஏக்கரும், சர்வே எண். 375ல், 1.50 ஏக்கரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கு பின்பு 25.7.78ல் திரு. வைத்தியலிங்கம் மற்றும் திரு. சின்னையன் ஆகிய இருவரும் ஒரு சுத்தவிக்கிரையப்பத்திரம் ஒன்றினை உருவாக்கியுள்ளதாகவும், அந்த பத்திரத்தில் திரு. சின்னையனுக்கு 16 செண்ட் நிலத்தை திரு. வைத்தியலிங்கம் விற்று விடுவதாக உள்ளதெனவும், அது பதிவு செய்யப்படாத ஒரு பத்திரமெனவும் குறிப்பிட்டுள்ளார். இந்த பதிவு செய்யப்படாத ஆவணத்தின் மூலம் 16 செண்ட் நிலம் கைமாறி உள்ளதெனவும் அதிலிருந்த ஆக்கிரமிப்புகள், தான் பணியில் இருக்கும்போது அகற்றப்பட்டதாகவும் தனக்கும் தற்போது ஆக்கிரமிப்பு நிகழ்வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

9. மேற்படி விசாரணைகள் மற்றும் இம் முறைமன்ற நடுவத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கில், திரு. கே. தீனன் என்பவர் 16.5.1988ல் சர்வே எண். 375/3ல் 78 செண்ட், சர்வே எண். 376/1ல் 22 செண்ட் மற்றும் 376/2ல் மொத்தமுள்ள 1 ஏக்கரில் 84 செண்ட் கிரயம் பெற்றுள்ளார். அதன் பின்னர் திரு. சி. ஆர். மணி என்பவருக்கு பொது அதிகாரம் பத்திரப் பதிவு செய்ததன் அடிப்படையில், சர்வே எண்.375/3, 376/1 மற்றும் 376/2 ஆகியவைகளுக்கான மனைப்பிரிவு அங்கீகாரம் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலிருந்து 16.7.1989ல் பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட பொது அதிகாரம் பெற்ற

திரு. சி. ஆர். மணி என்பவர் முறையாக 19.5.1989 அன்று தானப்பத்திரம் மூலம் சாலைக்கான பொது இடத்தினை (2095.034 சதுர மீட்டர்) மாங்காடு பேரூராட்சிக்கு தானமாக வழங்கியுள்ளார்.

10. திரு.பா.ரவி, முன்னாள் செயல் அலுவலர், மாங்காடு பேரூராட்சி என்பவரால் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு 05.01.2010ல் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் சர்வே எண்.376/1 மற்றும் 2ல் அடங்கியுள்ள கலைமகள் நகர் மனைப் பிரிவால் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் அங்கீகரித்து வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 30 அடி சாலையை 10.07.2009 அன்று காவல் துறையினர், வருவாய் துறை அலுவலர்கள் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் (காஞ்சிபுரம் மண்டலம்) முன்னிலையில் அகற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது 25.01.2010 நாளிட்ட கடிதத்திலும் இவ்விவரங்கள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

11. மேலும், திரு. A.C. நாகலிங்கம் என்பவர் திருபெரும்புதூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு, அசல் வழக்கு எண். 19/2010ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வாதுரையிலும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் மேற்படி விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், திரு. நாகலிங்கம் என்பவர் மேற்படி சாலையில் பேரூராட்சி சார்பில் சாலை அமைக்கும் பணியை நடக்க விடாமல் தடுத்து, அத்துமீறி சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளில் ஈடுபடுவதை சுட்டிக்காட்டி அப்போதைய செயல் அலுவலர் திரு. த. குணசேகரன் என்பவரால் 23.2.11 நாளிட்ட கடிதம் மூலம் மாங்காடு காவல் நிலைய ஆய்வாளருக்கும் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

12. 19.03.2009ல் திருபெரும்புதூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அரசு வழக்குரைஞர் திரு. எழிலரசன் என்பவர் செயல் அலுவலருக்கு வழங்கியுள்ள சட்டக் கருத்துரையிலும், உரிமையியல் வழக்கு எண்.1425/2008 மற்றும் இடைக்கால தடை மனு (I.A. No.212/2009) ஆகிய வழக்குகள், மாங்காடு பேரூராட்சி மேற்படி மனைப்பிரிவில், முறையாக தானம் பெறப்பட்ட இடத்தில் முறையான தார்சாலை அமைத்திட தடையாக இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

13. இந்நிலையில், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும திட்ட அமைப்பாளர் மற்றும் பூவிருந்தவல்லி சார் பதிவாளரிடம் விவரங்கள் பெறப்பட வேண்டியது அவசியமென முறைமன்ற நடுவத்தால் கருதப்பட்டு, மேற்படி அலுவலர்களிடம் விசாரிக்கும் பொருட்டு அழைப்பாணைகள்

அனுப்பப்பட்டன. அதன்படி பூவிருந்தவல்லி சார் பதிவாளர் அலுவலக் முதுநிலை தலைமை எழுத்தர் திரு. ஆர். கார்த்திகேயன் என்பவரும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழும உதவி திட்ட அமைப்பாளர் திரு. சு. அருள்மணி என்பவரும் 26.10.2017 அன்று ஆஜராகி தங்களது விளக்கங்களை சமர்ப்பித்தனர். பூவிருந்தவல்லி சார் பதிவாளரது கடித எண்.341/2017 நாள்:24.10.2017ல் அட்டவணை–II மற்றும் வில்லங்க சான்று ஆகிய ஆவணங்களின் நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டன. பூவிருந்தவல்லி சார் பதிவாளரது அறிக்கையில் மேற்படி வழக்கிலுள்ள மனைப் பிரிவு பதிவு ஆவணங்கள் ஆவண எண்.1840 மற்றும் 1841/1988, வெவ்வேறு கிராமங்களைக் கொண்ட வெள்ளானூர் மற்றும் பருத்திப்பட்டு கிராமம் என உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இது குறித்து வில்லங்கச்சான்று மற்றும் அட்டவணை IIல் பரிசீலனை செய்ததில் மேற்படி ஆவணங்கள் இரண்டுமே தென்சென்னை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டமைக்கான குறிப்புகள் உள்ளன எனத் தெரிவித்து அட்டவணை II மற்றும் வில்லங்க சான்று நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

14. இவற்றின்படி, சர்வே எண்.375/3ல் 78 செண்ட் நிலம், சர்வே எண்.376/1ல் 0.22 செண்ட் நிலம் என மொத்தம் 1 ஏக்கரும், சர்வே எண்.376/2ல் 100 செண்ட் நிலத்தில் 84 செண்ட் நிலமும் ஆக மொத்தம் 1 ஏக்கர் 84 செண்ட் திரு. கே. தீனன் என்பவர் பெயரில் கிரயம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நிலங்களில் இருந்து 2095.034 சதுர அடி மாங்காடு பேரூராட்சிக்கு 23.05.1989ல் தானப் பத்திரம் வழங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது. ச.எண்.375/2ல், 1712.054 சதுர அடி 03.08.1989ல் திரு. வைத்தியலிங்கம் என்பவரிடமிருந்து மாங்காடு பேரூராட்சிக்கு தானப் பத்திரம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

15. ஆனால், திரு. வ. ரவிக்குமார் முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் மாங்காடு பேரூராட்சி என்பவரது பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கை ந.க.எண்.132/2009/அ1 நாள்:01.02.2013ல் பத்திர எண்.1840 மற்றும் 1841 ஆகியவை குன்றத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தவறான தகவல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ச.எண்.375/2ல் பேரூராட்சியால் தானம் பெறப்பட்ட நில விவரமும் இடம் பெறவில்லை.

16. சென்னை பெருநகர் வளர்ச்சி குழும உதவி திட்ட அமைப்பாளர் திரு. சு. அருள்மணி அவர்கள் 26.10.2017 முறைமன்ற நடுவ விசாரணையின்போது கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்:–

"_சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தில் அங்கீகாரம் வேண்டி அனுப்பப்படுகின்ற முன்மொழிவுகளில் அவர்கள் கோரி உள்ள அளவுக்கு மட்டுமே அல்லது விதிகளின் படி அளவுகளை குறைத்தோ அங்கீகாரம் வழங்கப்படுவதே நடைமுறை. அங்கீகாரம் கோரும் அளவுக்கு மேல் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அங்கீகாரம் அளிப்பதில்லை. வழக்கில் உள்ள மாங்காடு கிராமம் சர்வே எண். 375/3 (78 செண்ட்), 376/1 (22 செண்ட்) மற்றும் 376/2 (1 ஏக்கரில் 84 செண்ட் மட்டும்) ஆக மொத்த பரப்பளவு 1 ஏக்கர் 84 செண்ட் ஆகும். சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அலுவலக கோப்பு எண். D2 (L) 9776/89-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை பிரிவின் மொத்த பரப்பளவு 8093.60 சதுர மீட்டர் (அதாவது 2.00 ஏக்கர்) ஆகும். இந்த 376/2ன் மொத்த பரப்பளவு 1 ஏக்கரில் மனுதாரர் மனை பிரிவு செய்ய கோரி விண்ணப்பித்திருந்த விஸ்தீரணம் 84 செண்ட் மட்டுமே ஆகும். சம்மந்தப்பட்ட புல எண். 376/2 ல் நிறுத்தி வைக்கப்பட்ட 16 சென்ட் நிலத்தின் அளவுகளை incorporate செய்து புல வரைபடத்தினை அப்போதைய மாங்காடு கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் சமர்பித்திருக்கிறார். அப்புல வரைப்படத்தின் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட 16 செண்ட் நிலத்தின் கிழக்கு பக்கம் அளவு 12.2 மீட்டர் (அதாவது 40 அடி) ஆகும். மனைப்பிரிவு ஒப்புதல் கோரும் நிலத்தின் பரப்பளவு 1 ஏக்கர் 84 செண்ட் மட்டுமே ஆனாலும் மேற்கூறப்பட்ட 16 செண்ட் நிலத்திற்கு தனியாக உட்பிரிவு ஏதும் புல வரைபடத்தில் செய்யபடாததாலும் மனைப்பிரிவு ஒப்புதல் 2 ஏக்கர் நிலப்பரப்பிற்க்கே சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் PPD/LO No.146/89 Letter No. D2 (L) 9776/89 Dated: 15.7.1989ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. மீதமுள்ள 16 செண்ட் நிலத்தில் எவ்விதமான மனைகளும் உட்பிரிவு செய்யப்படவில்லை. அப்பகுதி விவசாய பயன்பாடு என்றே ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கோப்பினில் குறிப்பு கோப்பு பக்கங்கள் சிலவற்றை காணப்படவில்லை. ஆதலால் எந்த காரணத்திற்காக மனைப்பிரிவு ஒப்புதல் 2 ஏக்கர் நிலபரப்பிற்கு அளிக்கப்பட்டது என்பதை விளக்க இயலவில்லை. அந்த ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அதன் தென்பகுதியில் கிழக்கு மேற்காக உத்தேசிக்கப்பட்ட 30 அடி அகல சாலை, மனைபிரிவு ஒப்புதல் செய்ய கோரி விண்ணப்பித்தினை சமர்ப்பித்த அதன் நில உரிமையாளர் திரு. தீனன் அவர்களுக்கு சொந்தமான இடத்திலேயே உத்தேசிக்கப்பட்டுள்ளது. திரு. தீனன் அவர்களும் மேற்கூறப்பட்ட மனைப்பிரிவில் உத்தேசிக்கப்பட்ட சாலை பகுதியினை

உள்ளாட்சி அமைப்பிற்கு பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் எண். 3924/1989 நாள்:23.05.1989 மூலமாக தானமாக அளித்துள்ளார். சம்பந்தப்பட்ட மனைப்பிரிவு இடத்தினை களஆய்வு செய்து வட்ட சார் ஆய்வாளர், திருப்பெரும்புதூர் மற்றும் மாங்காடு பேரூராட்சியின் செயல் அலுவலர் ஆகியோர் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் புல எண்கள். 375/3, 376/1 மற்றும் 376/2 ஆகியவற்றின் கூட்டு புல வரைபடத்தினை பார்வையிட்டதில் மேற் கூறப்பட்ட ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவின் தென் புறத்தில் உத்தேசிக்கப்பட்ட 9 மீட்டர் (30 அடி) அகல சாலைக்கு பதிவாக 6 மீட்டர் அகலம் (20 அடி) கொண்ட சாலையே புலத்தில் காணப்படுவது. மேற் கூறப்பட்ட 16 செண்ட் நிலத்தின் கிழக்கு பக்கம் அளவு 17.6 மீட்டர் ஆக உள்ளதும் தெரிய வருகிறது. ஆனால் சம்மந்தப்பட்ட புல எண். 376/2ல் மீதமுள்ள 16 செண்ட் நிலத்தின் அளவுகளை incorporate செய்து புல வரைப்படத்தினை அப்போதைய மாங்காடு கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் சமர்பித்திருக்கும் புல வரைப்படத்தின் படி மேற்குறிப்பிட்ட 16 செண்ட் நிலத்தின் கிழக்கு பக்கம் அளவு 12.2 மீட்டர் (அதாவது 40 அடி) மட்டுமே ஆகும். மேற் கூறப்பட்டதில் இருந்து 16 செண்ட் நிலத்தின் கிழக்கு பக்கம் அளவு கிராம நிர்வாக அலுவலர் சமர்ப்பித்து இருந்த புல வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகளுக்கு மேலாக அதாவது 5.4 மீட்டர் அதிகமாக, வட்ட சார் ஆய்வாளர், திருப்பெரும்புதூர் அவர்கள் கையொப்பமிட்டு சமர்ப்பித்துள்ள புல எண்கள் 375/3, 376/1 மற்றும் 376/2 ஆகியவற்றின் கூட்டு புல வரைபடத்தில் காணப்படுகிறது என்பது தெரிய வருகிறது. அந்த வகையில் தென் புறத்தில் மேற்கூறப்பட்ட கிழமேல் 9.0 மீட்டர் (அதாவது 30 அடி) அகல சாலையில் 3 மீட்டர் (அதாவது 10 அடி) அகலம் வரை புலத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கின்றது என அறியப்படுகிறது.", என்று தெரிவித்தார்.

17. மேற்கண்ட சென்னை பெருநகர வளர்ச்சி குழும உதவி திட்ட அமைப்பாளரது வாக்குமூலம் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்ததில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஒப்புதல் அளித்த அளவுகளுக்கு மாறாக புல வரைபடம் திருத்தப்பட்டுள்ளது என்பதும் முறையீட்டு மனுதாரர் புகாரில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி மனைப்பிரிவில் பேரூராட்சிக்கு சொந்தமான சாலை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. ஆனால் மேற்படி நிலம் குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால், இது குறித்து அரசு வழக்குரைஞரின் அறிவுரை பெற்று சட்டப்படியான உரிய நடவடிக்கையை எடுக்க பேரூராட்சிகளில் இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும், முறையீட்டு மனுதாரர் குடியிருப்பு பகுதிக்கு உரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர மாங்காடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

18. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இப்பொருள் குறித்து தொடர்ந்து கண்காணித்து சம்பந்தப்பட்ட மனைப்பிரிவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்து மூன்று மாதங்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை தாக்கல் செய்திட வேண்டுமெனவும் வலியுறுத்தி, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**//ஆணைப்படி– அனுப்பப்படுகிறது//–**

செயலாளர். 28/11/17

பெறுநர்

1. திரு. எஸ். டி. பெருமாள்,
தலைவர், கலைமகள் குடியிப்போர் நலச்சங்கம்,
ஏ–3, ஸ்ரீநிவாஸ் அபார்ட்மெண்ட்,
8/84, டீசூல்லா ரோடு, தியாகராய ரோடு,
சென்னை – 600 017.

2. செயல் அலுவலர்,
மாங்காடு பேரூராட்சி , மாங்காடு,
சென்னை – 600 122.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநரகம்,
காஞ்சிபுரம் மண்டலம், காஞ்சிபுரம்.

4. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை.